# கற்பகம்
KATPAKAM திங்கள் இதழ்

விலை ரூபா 10/-

மலர்-02 நவெம்பர்-2008 இதழ்-13


## குறளமுதம்-13

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதைத் தரும்.

**அதிகாரம்-2 - அறத்துப்பால் - வான் சிறப்பு**

"விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியன் உலகத்து
உள்நின்று உடற்றும் பசி"

*மழை பெய்யாமல் போனால், பரந்த கடலாற் சூழப்பட்ட அகன்ற உலகத்தில் பசி நிலைத்து நின்று உயிர்களை வருத்தும்.*

### வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் கொத்தணியின்

# சத்துணவுத் திட்ட செயற்பாட்டுக்கு பிரதேச செயலகம் உதவத் தயார்!



**-சண்டிலிப்பாய் உதவி பிரதேச செயலர்-**

சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் இம்மாதம் முதல் சிறுவர் முன்பள்ளிகளுக்கான போசாக்குத் திட்டம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளோம். இத்திட்டத்தின் மூலம் போஷாக்கற்ற முன்பள்ளி சிறார்களுக்கு பசுப்பால் வழங்கப்படவுள்ளது. மூன்று ஆண்டு காலத்துக்கு அமுல்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தில் கொத்தணியையும் இணைத்துக்கொள்வதற்கு உங்களுக்குத் தேவையானவற்றை திட்ட முன்மொழிவாக எமக்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஊடாக அனுப்பி வைத்தால் அத்திட்டத்திற்கான ஏற்பாடுகளை நாம் மேற்கொள்வோம் என பிரதேச செயலர் திருமதி எழிலரசி-அன்ரன்யோகநாயகம் தெரிவித்தார்.

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் அமரத்துவமான கொத்தணியின் முன்னாள் தலைவர் நடேசு, பொது முகாமையாளர் சந்திரராசா ஆகியோரது நினைவுகூரல் மற்றும் அங்கத்துவ சங்கங்களின் முன்பள்ளிகளுக்கான பாண்ட் வாத்தியங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்..

கொத்தணியின் தலைவர் மெய்யழகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது,

ஒருவர் பொதுவாழ்வில் ஈடுபட்டு அவர்கள் சமூகத்துக்கு ஆற்றிய பணிகள் சேவைகள் என்பன காத்திரமானவையாக இருந்தால் அவர்கள் அமரத்துவமான பின்பும் நினைவு கூரப்படுவார்கள் என்ற உண்மையை இங்கு காணும்போது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

முன்பள்ளிகளைப் பொறுத்தவரையில் பல்வேறு விதமான தொழில்நுட்பங்களுடன் காத்திரமான ஒரு இடத்தை வகிப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

[2ம் பக்கம்பார்க்க]

# சமாசம் கூட்டுறவு நூல் வெளியீட்டிற்கு உதவுவது பாராட்டுக்குரியது!

**பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா தெரிவிப்பு!**

சமூகவியல் சம்பந்தமான நூல்கள் ஆங்கில மொழியிலேயே பெரும்பாலும் வெளிவந்துள்ளன. ஆனால் **"சமூக அறிவியல் இயற்கை விஞ்ஞானமும் கூட்டுறவு அபிவிருத்தியும்"** என்னும் நூலை தமிழ் மொழியில் வெளியிட்டு அக்குறைபாட்டை நிவர்த்தி செய்த ஆசிரியர் இ.சுப்பிரமணியம் பாராட்டுக்குரியவர் ஆவார் என்று யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா தெரிவித்தார்.

வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாச மண்டபத்தில் தலைவர் சி.சந்திரலிங்கம் தலைமையில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்,

காலத்திற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் இந்நூலினை எழுதி சமாசத்தின் வெளியீடாக வெளியிட்டிருப்பது கூட்டுறவுத் துறையில் ஏற்படுத்திய ஒரு சாதனையாக கருதலாம். இது போன்ற நூல்கள் உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று கூறினார்.

நூலின் ஆய்வுரையை நிகழ்த்திய யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ கற்கைகள் பீடாதிபதி க.தேவராசா பேசுகையில்,

சமூகவியல் அறிவு ஒவ்வொரு மனிதனுக்கும் அவசிய தேவையாக உள்ளதென்பதையும் கூட்டுறவு ஒரு சமூக நிறுவனம் என்றும் அதில் பணிபுரிபவர்கள் சமூகம் சார்ந்த பிரச்சினைகளை அறிந்து அதற்கு எவ்வாறு தீர்வு காணலாம் என்பதை மிகவும் இலகுவான முறையில் தெளிவுபடுத்தி ஆசிரியர் இந்நூலில் எழுதியிருப்பதும் தலைமைத்துவம் பற்றியும் தலைமைத்துவ பண்புகள் பற்றியும் விளக்கியிருப்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இந்நூலைவிட ஆசிரியர் கூட்டுறவு சார்ந்த சில நூல்களையும் எழுதியுள்ளார். கூட்டுறவில் நீண்டகால அனுபவமுடைய இவர், அவ்வியக்கத்தில் உண்மையான பற்றுறுதி கொண்டு செயற்பட்டு வந்தார் என்பதை இந்நூலின்மூலம் உணர்ந்து கொள்ள முடிகிறது. இந்நூலினை சமாசம் வெளியிடுவதற்கு பனை அபிவிருத்திச் சபை தலைவராக இருந்து தற்பொழுது புலம்பெயர்ந்து வாழும் நடராசாவின் வாழ்த்துச் செய்தி இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும் என்று கூறிய அவர், இந்நூலினை பல்கலைக்கழக மாணவர்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் வேண்டிய நடவடிக்கைகளை நான் செய்து தருவேன் என்றும் கூறினார்.

நூலின் முதற்பிரதியை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா வெளியிட்டு வைக்க மானிப்பாய் தேசிய சேமிப்பு வங்கியின்

[8ம் பக்கம் பார்க்க]




"கணக்கிலா பயன்தரு கற்பகத்ருபோல் கற்பகமும் பயன் தரும்"

### சிந்தனைத்துளி

"ஐக்கியம் என்பது ஒன்றாக இலங்குவது ; அதற்கு ஆதியும் இல்லை: அந்தமும் இல்லை. அது என்றும் உள்ளது, எங்கும் உள்ளது! -கூட்டுறவு அறிஞர்-

## கற்பகக்கரு

### இரண்டாவது ஆண்டில்....

கூட்டுறவாளர்களின் தனித்துவமான குரலாக ஒலித்துக் கொண்டிருக்கும் "கற்பகம்" திங்கள் இதழ் இத்திங்களிலிருந்து இரண்டாவது அகவையில் காலடி பதிக்கும் வேளையில் கூட்டுறவாளர்களின் இதயங்கள் பூரிப்படைகின்றன.

காலச் சூழலின் மாற்றங்களுக்கேற்ப அவற்றுள் சிக்கித் தத்தளித்து, எதிர்நீச்சல் போட்டு பல தடைகளையும் தாண்டி "கற்பகம்" வெளிவந்து கொண்டிருப்பது கூட்டுறவாளர்கள் அனைவரும் அறிந்த விடயமே!.

கூட்டுறவு அமைப்பின் மூலம் பனந் தொழில் வல்லுநர்களின் கடின உழைப்பின் மகத்துவத்தையும் அவர்களது அடிப்படை வாழ்வாதாரத் தேவைகளை இனங்கண்டு, திட்டமிட்ட அடிப்படையில் அவற்றிற்த செயல்வடிவம் கொடுத்து நிறைவேற்றிவரும் யாழ். மாவட்டத்திலுள்ள பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாட்டுக்கு வழியாகவும் உறுதுணையாகவும் இருந்து "கற்பகம்" தனது பணிகளைத் திறம்பட ஆற்றிவருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

மாவட்டத்திலுள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களையும் கொத்தணிகளையும் தன்னுள் இணைத்து செயற்பட்டு வரும் வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் எவ்வளவோ இன்னல்களுக்கு மத்தியிலும் திங்கள் தோறும் கற்பகம் இதழை வெளியிட்டு செய்து வருவது பாராட்டத்தக்கதொரு செயற்பாடாகும்.

சமாசத்தின் இத்தகைய அரிய செயற்பாட்டுக்கு சமாசத்தில் இணைந்துள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும், கொத்தணிகளும் மற்றும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்ந்துவரும் கூட்டுறவாளர்களும் அளித்துவரும் ஆதரவு கற்பகத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ளது.

கற்பகத்தின் வளர்ச்சியில் அதன் ஆசிரியர்களாக இருந்த அமரர் கே.வி.நடராசா அவர்களின் பங்கு அளப்பரியதாக இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

அதனைத் தொடர்ந்து ஆசிரியர்களாக செயற்பட்டவர்களையும் இந்நாளில் கற்பகம் நினைவுகூருவதில் பெருமைகொள்ளும் அதே வேளை இனிவரும் காலங்களிலும் கற்பகம் தனது பணியைத் தொடர அனைத்துக் கூட்டுறவாளர்களினதும் ஒருமித்த ஆதரவை எதிர்பார்த்து நிற்கிறது.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"

-ஆசிரியர்-

## பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்

## கிளை நிர்வாக நடைமுறை விதிகள்

**10.6.** சங்கம் செய்யும் தொழில் முயற்சிக்கு பாதகமான செயலில் ஈடுபடாதவர்.

**10.7.** இச்சங்கத்திலோ அல்லது இதை ஒத்த வேறு சங்கத்திலோ ஊதியம்பெறும் பதவியை வகிக்காதவர்.

**10.8.** குறித்த காலத்தில் அங்கத்துவ இடாப்பு மூடப்படும்போது கிளைக்குழு அங்கத்தவர் பட்டியலில் இடம்பெறுபவர்.

**10.9.** சங்கத்தின் எதிர்கால புதிய முயற்சிகளுக்கு எந்த வகையிலும் இடையூறு இல்லாத பூரண ஒத்துழைப்பை வழங்குபவர்.

**10.10.** கடந்த ஒரு வருடத்தினுள் தொடர்ச்சியாக 3 மாதத்திற்கு மேல் சங்கம் கையாளும் உற்பத்திப் பொருளை சங்கத்திற்கு வழங்கியவர்.

### 11. கிளை நிர்வாக சபை அமைத்தல்

**11.1.** கிளையின் தொழிற்பரப்பில் உள்ள கருமங்களை ஒழுங்கு செய்யவும், நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தவும், ஒரு கிளை நிர்வாகசபை கிளை பொதுச்சபையால் தெரிவு செய்யப்படும். இதில் 9 தகுதி பெற்ற உறுப்பினர்கள் இருப்பர். கிளைப் பகுதியில் இச்சங்கத்தின் மகளிர் குழு இயங்கிக் கொண்டிருப்பின் மகளிர் குழு உறுப்பினர் ஒருவரும், உற்பத்தி துறைசார்ந்த தரக்கட்டுப்பாட்டுக் குழுவால அல்லது பொருத்தமான வேறு கூட்டுறவு நலன்பேணும் குழு உறுப்பினர் ஒருவரும் இடம்பெறுவர். மிகுதி 7 பேரும் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்ட கிளைக்குழு உறுப்பினர்களாக இருப்பர்.

**11.2.** அடுத்துவரும் மூன்று வருடாந்தப் பொதுக்கூட்டங்களிலும் கிளை நிர்வாக சபையின் 1/3 பகுதியினர் என்ற ஒழுங்கில் உறுப்பினர்கள் பதவி விலகுவர். இவ்வாறு விலக வேண்டியவர் சீட்டிழுப்பின் மூலம் முதல் ஆண்டிலேயே தெரியப்படுத்தப்படுவார். எப்படி இருப்பினும் கிளைக்குழு அமைத்த ஓராண்டு பூர்த்தியின் பின்பே இவ் ஒழுங்கு நடைமுறைக்கு வரும்.

**11.3.** தெரிவு செய்யப்பட்ட கிளை நிர்வாக சபையின் பதவி தொடர்பில் 11.2இல் குறிப்பிட்டபடி ஏற்பாடு இருப்பினும், கிளைப் பொதுச்சபையின் விருப்பத்தின்பேரில் அந்த கிளை நிர்வாக சபையை முழுமையாக கலைத்து புதிய நிர்வாக சபையை நிறுவ முடியும்.

### 12. கிளை நிர்வாக சபைக் கூட்டங்கள்

**12.1.** வேண்டிய வேளைகளில் குறைந்த பட்சம் மாதம் இருமுறையாகுதல் கிளை நிர்வாக சபை கூட்டப்படல் வேண்டும். எந்த விடயம் பற்றியும் ஆலோசிக்க சபையில் அரைவாசிக்கு மேற்பட்டோர் சமூகமாயிருத்தல் வேண்டும். தலைவர் அல்லது உபதலைவர் அல்லது இருவருமில்லாதவிடத்து சமூகமளிப்பவரால், பொது விருப்பின்படி தெரிவு செய்யப்படுபவர் அக்கிராசனம் வகிப்பார். **[வளரும்]**

### சத்துணவு....... 1ம்பக்க தொடர்ச்சி

ஒரு பிள்ளை பிறந்து அந்தப்பிள்ளை பெற்றோரிடமிருந்து முன்பள்ளிக்குச் செல்கிறது. முன்பள்ளிகளுக்கு செல்லாமல் எவரும் வெளியில் வரமுடியாது. பள்ளிப் பருவத்தில்தான் குழந்தைகள் சமூகத்தில் கலந்துகொண்டு முதலாவது தொடர்பாடலை மேற்கொள் கிறார்கள்.


வலிகாமம் கொத்தணியைப் பொறுத்தமட்டில் இருந்த நிதி வளத்துடன் சொந்தக்காலில் நிற்ககூடிய நிதிக் கட்டமைப்பைக் கொண்டுள்ளது. இந்நிதிக் கட்டமைப்பை ஏற்படுத்திய நிர்வாகிகளையும் பணியாளர்களையும் உண்மையிலேயே நான் பாராட்டுகிறேன் என்றார்.


கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் பேசுகையில் கூறியதாவது,

கொத்தணியின் சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் முன்பள்ளிகளுக்கான பான்ட் வாத்திய இசைக்கருவிகளை வழங்குவதற்கு முன் வந்த கொத்தணியின் முயற்சி பாராட்டப்படக்கூடியதாகும். பான்ட் வாத்திய கருவிகளைப் பெற்றுக்கொள்ளவிருக்கும் முன்பள்ளிகள் சிறுவர்களுக்கு தகுந்த முறையில் பயிற்சி அளித்து அவர்கள் முன்பள்ளிகளை விட்டு வெளியேறும்போது வாத்தியக் கலைஞர்களாக வெளியேற வேண்டும்.

கொத்தணியின் உற்பத்திப் பொருட்களைத் தரமானதாக உற்பத்தி செய்தால் அதனை நாம் சந்தைப்படுத்தி அவற்றின் விற்பனையை அதிகரிக்கச் செய்ய முடியும் என்று கூறிய அவர் நாட்டில் மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளை தரமானதாக செய்து எமது பிரதேச பொருளாதார அபிவிருத்திக்கு வழி செய்ய வேண்டும் என்று கூறினார்.

இந்நிகழ்வில் கொத்தணியால் தனது அங்கத்துவ சங்கங்களுக்கு பான்ட் வாத்தியக் கருவிகள் வழங்கப்பட்டன.





# மனித மூளை

இந்த உலகத்தில் எதைப்பற்றி சந்தேகம் ஏற்பட்டாலும் பொறுத்துக்கொள்ளலாம், மூளையைப் பற்றிச் சந்தேகப்பட்டால் அது சகிக்க முடியாத அவமானமாகும். இந்த மூளை உலகிலுள்ள அற்புதமான பொருட்கள் எல்லாவற்றையும்விட அதியற்புதமான பொருள். நாம் நினைப்பதைவிட எத்தனையோ அரிய காரியங்ளைச் சாதிக்க வல்லது நம் மூளை.

முதலாவதாக நாம் தெரிந்துகொள்ள வேண்டியது மூளையின் சக்தி என்றுமே குறைபடாதது என்பதுதான். நம் மூளையில் எத்தனை அறைகள் இருக்கின்றன தெரியுமா? சுமார் 100 கோடியிலிருந்து 120 கோடி வரை அறைகள் இருக்கின்றன. அதாவது மூளைக்கு முக்கியமாக வேண்டிய "செல்" கள் இவை. இந்த அறைகளிலிருந்துதான் மின் இரசாயன (எலெக்ரோ-கெமிக்கல்) அலைகள் அனுப்பப் பெறுகின்றன. அந்த அலைகளால்தான் நினைவுச் சித்திரங்களும் யோசனை சிற்பங்களும் எழுந்து பிரகாசிக்கின்றன. கடந்தகால நினைவுகள் வரும்போது மூளையிலே நினைவு அலை வேலை செய்கின்றது. எல்லாம் மின் இரசாயன அலைகள் நிரம்பிய மூளை செய்யும் வேலை.

நிகழ்ந்த சம்பவங்களையும் நிகழ்ச்சிகளையும் மூளை எப்படி பதிவு செய்து வைத்துக்கொள்கிறது என்பது பற்றிய விடயம் பூரணமாகத் தெரியவில்லை. நூற்றுக்கணக்கான செல்கள் (சிறு சிறு அறைகள்) ஒன்றாக இணைந்துள்ள இணைப்பில் ஒவ்வொரு நினைவு அலையும் மின்சார அலைபோல் சுற்றிச் சுற்றி வருவதால்தான் இந்த ஞாபக சக்தி இருந்து வருகிறதென்று சில விஞ்ஞானிகள் நினைக்கிறார்கள். இந்த மின்சார அலையின் வேகம் மங்கும்போது ஞாபக சக்தியும் குறைகிறது. திடீரென்று, தலையில் மிகவேகமாக அடிவிழுந்து விட்டால் இந்த மின்சார அலை திடீரென்று நின்று விடுகிறது. முன்பு நடந்த சம்பவங்கள் எல்லாம் மறந்து போய் விடுகின்றன.

எழுபது வருடம் வாழ்ந்துவிட்டால் ஒவ்வொரு மூளையிலும் நூறு கோடி நினைவுத் திரைகள் தொங்கிக் கொண்டிருக்கும் என்று சொல்லுகிறார் ஒரு பெரிய ஆராய்ச்சியாளர்.

இரண்டாவதாக மூளையைப் பற்றி ஒரு தவறான அபிப்பிராயம் இருந்து வருகிறது. அதாவது வயதாக வயதாக மூளை மழுங்கி விடுகிறதாம். அதனால் படிப்பு முதலியவை ஏறாதாம். இது முற்றிலும் பிழையான கருத்து. ஆரம்பத்தில் மூளையில் எத்தனை கோடிக்கணக்கான செல்களுடன் பிறந்தோமோ அத்தனையும் நாம் இறக்கும் வரையிலும் இருக்கத்தான் செய்கிறது. ஏதோ சில செல்கள் மறந்து விடலாம். ஆனால் மூளை நோய் வந்து இந்த செல்கள் பழுதடைந்தாலொழிய இப்படி மறப்பவை கோடிக்கணக்கான எண்ணிக்கையின் முன் ஒரு தூசி. என்றாலும் உடலிலுள்ள தசை நார்கள் ரத்த ஓட்டம் இவை மாதிரிதான் மூளையும் என்று மதித்து, அது தளர்ச்சி அடைகிறது என்று எண்ணி விடுகிறார்கள்.

உபயோகிக்கும் சாவி ஒருபோதும் துருப்பிடிக்காமல் இருக்கும் என்பது அனுபவ உண்மை. மூளையை உபயோகிக்க உபயோகிக்கத்தான் சிந்தனா சக்தி வளர்கிறது. அடுத்ததாக நாம் தெரிந்து கொள்ளவேண்டியது தாழ்வு மனப்பான்மை இருந்தால் அதை எப்படி அகற்ற வேண்டும் என்பதே. "அவன் என்னைவிட புத்திசாலி" என்று சொல்லும் பழக்கத்தையே நம் வாழ்க்கையில் இருந்து நீக்க வேண்டும். "அறிவு" என்பது பரம்பரையைப் பொறுத்தது. வாழ்க்கை முழுவதும் அது மாறுவதில்லை. மூளையில்லை என்று அறியாமையால் சொல்லிக்கொண்டு நம்மை நாமே குறைவுபடுத்திக் கொள்ள முயல்கிறோம். உள்ள அறிவைக் கொண்டு எத்தனை எத்தனையோ புத்திசாலித்தனமான காரியங்களைச் செய்துவிடலாம். ஆனால் செய்கிறோமா?



## நயாகரா

உலகப் புகழ்பெற்ற நீர்வீழ்ச்சி நயாகரா. இது வடஅமெரிக்க கண்டத்தில் உள்ளது. கனடாவுக்கும் அமெரிக்காவுக்கும் எல்லையாக ஓடும் நயாகரா ஆற்றில் அமைந்துள்ளது.

கோட் ஐலன்ட் என்ற தீவைச் சுற்றி நயாகரா ஆறு இரு கிளைகளாகப் பிரிந்து பாயும்போது இரு அருவிகளாக விழுகிறது. இதில் ஒன்று கனடாவைச் சேர்ந்தது. அருவியின் இரு பகுதிகளில் இதுவே பெரியது, அழகானது. ஆற்று நீரின் பெரும் பகுதி இந்த அருவியிலேதான் விழுகிறது. இதன் உயரம் 48 மீட்டர். அகலம் 885 மீட்டர். மற்றொரு அருவி அமெரிக்காவைச் சேர்ந்தது. இதன் உயரம் 50 மீட்டர் அகலம் 420 மீட்டர். இந்த இரு அருவிகளில் இருந்தும் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இதனால் இந்தப் பகுதி தொழில் வளம் நிறைந்ததாக காணப்படுகிறது. இந்த அருவிகளின் அழகைக் கண்டு மகிழ ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் இங்கு வருகிறார்கள்.



# கொடிய பிரபு

“பழங் காலத்தில் கொடிய பிரபு ஒருவர் இருந்தார். வேலையாட்களை அவர் விரட்டி விரட்டி வேலை வாங்கி வந்தார். பாதி உயிர்போகும் வரை ஓயாது உழைக்கும்படி அவர்களைப் பலவந்தம் செய்தார். விழா நாட்களிலும்கூட அவர்களுக்கு ஓய்வில்லாதபடி வதைத்து வந்தார்.

ஒரு முக்கிய விழாவன்று பெரும்பாலானோரும் ஓய்வெடுத்துக் கொண்ட காலைப் பொழுதில் இந்தப் பிரபு தமது வேலையாட்களை மீண்டும் போரடிக்குமாறு களத்துக்கு அனுப்பி வைத்தார்.

முந்திய நாள் பகலும் இரவும் தொடர்ந்து போரடிக் களத்தில் வேலை செய்து களைத்துப்போயிருந்த இந்த வேலையாட்களால் நிற்கக்கூட முடியவில்லை.

அவர்கள் வேலை ஆரம்பித்த சிறிது நேரத்திற்கு எல்லாம் பிரபுவே கைத்தடியையும் எடுத்துக் கொண்டு களத்துக்கு ஓடி வந்தார். தனது வேலையாட்கள் வேகமாய் வேலை செய்யவில்லை என்பதாய்க் கைத்தடியை ஓங்கியவாறு சீறிப் பாய்ந்து அவர்களை மிரட்டினார், வாயில் வந்தபடி ஏசினார்.

“தடியன்கள்! போரடி வேலைகள் பூராவையும் முடிக்கும்வரை உங்களைக் களத்தைவிட்டுப் போக விடமாட்டேன்! ” என்று கத்தினார்.

போரடிப் பொறியில் குதிரையைக் கட்டி ஓட்டினால் வேலை சீக்கிரம் முடிந்துவிடும் என்று சொல்லி வேலையாட்கள் குதிரை வேண்டுமென்று கேட்டனர்.

“என்ன? குதிரையா வேண்டும், குதிரை!...” என்று அவர் கூச்சலிட்டார். “தடியன்களே, இன்னொரு தரம் குதிரை வேண்டுமென்று பேசினால் கழுத்தை நெரித்து உங்களைக் கொன்று விடுவேன்! உங்களுக்கு ஒன்றும் குதிரை கிடைக்காது! குதிரைக்கு ஓய்வு வேண்டும்! நீங்களேதான் இந்த வேலையைச் செய்து முடித்தாக வேண்டும்!” என்று கத்தினார்.

தொண்டை கிழியக் கத்திவிட்டு, அவசரமாய்ப் போரடிக் களத்திலிருந்து வெளியே சென்றார். களத்தில் எழுந்த புழுதியை மூக்காலும் வாயாலும் உள்ளுக்குள் இழுக்க அவர் விரும்பவில்லை.

அவர் வெளியேறியதும் யாரோ வெளியே கூச்சலிடுவது வேலையாட்களின் காதில் விழுந்தது.

“ஏய், எகிறாதே! நில்-ல்-லு! ஏய்-ஏய்!..” என்று யாரோ கூச்சல்போடுவதும் குதிரை கனைப்பதும் கேட்டன. பிறகு கடிவாளம் குலுங்கிற்று. குதிரைக்கு யாரோ சேணமிடுகிறார் என்பது தெரிந்தது.

யாராய் இருக்கும்?

திடுமென ஒரு கிழவர் போரடிக் களத்துக்குள் வந்தார். தொண்டுக் கிழவரான அவருடைய வெள்ளைத் தாடி நீளமாய் இருந்தது, மின்வெட்டுப்போல அவருடைய கண்கள் பளிச்சிட்டன. லகானைக் கெட்டியாய்ப் பிடித்துக் கழுக்கு முழுக்கென்றிருந்த கருஞ்சிவப்புப் பொலிக் குதிரை ஒன்றை அவர் இழுத்து வந்தார்.

அந்தக் கிழவர் வேலையாட்களிடம் கூறினார்:

“உங்களுக்கு இதோ ஒரு குதிரை இருக்கிறது. போரடிப் பொறியில் பூட்டியடியுங்கள். கடினமான எந்த வேலையானாலும் இதை நீங்கள் உபயோகித்துக் கொள்ளலாம். காட்டுக்குப் போய் மரம் வெட்டுவீர்களானால், மரத்தைத் துண்டாடி வண்டியில் ஏற்ற வேண்டாம், வெட்டிச் சாய்த்த மரத்தின் கொம்புகளுடன் குதிரையைச் சேர்த்துக் கட்டுங்கள், அப்படியே அது மரம், கிளை, குச்சி, தழை எல்லாவற்றையும் சேர்த்துப் பிரபுவின் வீட்டுக்கு இழுத்துச் செல்லட்டும். குதிரை மக்காறு செய்து அடம் பிடித்தால் ஈவிரக்கம் காட்ட வேண்டாம், சவுக்கை எடுத்து விளாசி நையப்புடையுங்கள்! விலாப்புறம், முதுகு எங்கு வேண்டுமானாலும் அடியுங்கள், ஆனால் தலையிலே மட்டும் அடிக்கவே அடிக்காதீர்கள். குதிரைக்குத் தீனி ஒன்றும் போடவேண்டாம். அந்திப் பொழுதானதும் லாயத்துக்கு இழுத்துச் சென்று வார்களைக் கூரையில் மாட்டிக் கட்டுங்கள், பகற்பொழுது வேலைக்குப் பிற்பாடு இரவை அது அப்படியே தொங்கி நின்றவாறே கழிக்கட்டும். இந்தக் குதிரைக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்!”

இவ்வாறு சொல்லிவிட்டு கிழவர் மறைந்துவிட்டார்.

குதிரை பலமாய்க் கனைத்தது. அதன் குரல் அப்படியே பிரபுவின் குரலை ஒத்திருந்தது. வேலையாட்கள் உடனே இது எப்படிப்பட்ட குதிரை என்பதை ஊகித்துக் கொண்டுவிட்டனர்.

“இடியின், மின்னலின் தேவனாகிய பெரியவர் பெர்க்கன்தான் இந்தக்குதிரையை நம்மிடம் கொண்டு வந்து தந்திருக்க வேண்டும்!” என்று அவர்கள் கூறிக் கொண்டனர். “பெர்க்கனுடைய கட்டளையை நாம் தவறாமல் நிறைவேற்ற வேண்டும். குதிரையை அவர் என்னவெல்லாம் செய்யச் சொன்னாரோ அவ்வளவையும் நாம் செய்தாக வேண்டும்” என்று தீர்மானித்துக் கொண்டனர்.

கருஞ்சிவப்புப் பொலிக் குதிரையை உடனே அவர்கள் போரடிப் பொறியில் பூட்டி வேலையை ஆரம்பித்தனர். ஆனால் கனைத்துக்கொண்டு குதிரை எகிறிக் குதித்தது. பிடிவாதம் செய்தது, குளம்புகளைத் தரையில் படபடவெனத் தட்டித் தலையைத் திருப்பிக் கொண்டு முண்டியது. குதிரை வேலை செய்ய விரும்பவில்லை என்பது தெளிவாய்த் தெரிந்தது. ஆனால் அவர்கள் அதைச் சும்மா விடவில்லை, சண்டித்தனம் செய்யாதே என்று நையப்புடைத்தனர்.

நாள் தவறாமல் இவ்வாறே நடைபெற்று வந்தது. கடுமையான வேலை எதுவாயினும் உடனே அவர்கள் இந்தக் கருஞ்சிவப்புப் பொலிக் குதிரையை இழுத்து வந்து பூட்டிவிடுவார்கள். குதிரை சண்டித்தனம் செய்யுமாயின் சவுக்குகளாலும் இரும்புக் கம்பிகளாலும் ஈவிரக்கமின்றி அடித்து நொறுக்குவார்கள்.

**லாத்வியநாட்டு நவரசக் கதை**

பகற்பொழுது பூராவும் அதை ஓய்ச்சல் ஒழிவின்றி வேலை வாங்கினர். பிறகு இரவு வந்ததும் லாயத்துக்கு இழுத்துச் சென்று வார்களை இழுத்துக் கூரையிலே கட்டிப் பொழுது விடியும் வரை அப்படியே அது தொங்கிக்கொண்டு நிற்கும்படி செய்தனர்.

குதிரைக்கு அவர்கள் தீனி போடவில்லை. அது வேலை செய்த காலம் முழுவதிலும் குளிர் காலத்தில் எப்பொழுதாவது உலர் புல்லில் ஒரு வாய் திருடித் தின்றதையும், கோடையில் எங்காவது வேலியோரத்தில் முட்செடிகளின் தழைகளைக் கொறித்ததையும் தவிர, அதற்கு வேறு ஆகாரம் கிடைக்கவில்லை.

கருஞ்சிவப்புப் பொலிக் குதிரை இவர்களிடம் வந்து சேர்ந்த அதே நாளன்று இவர்களுடைய கொடிய பிரபு எங்கோ மாயமாய் மறைந்துவிட்டார். அவருடைய மனைவி எங்கெங்கெல்லாமோ தேடிப் பார்த்தாள், அவர் கிடைக்கவே இல்லை.

ஓராண்டு ஓடி மறைந்தது. ஆரம்பத்தில் கண்ணுக்கு இனிதாய்க் கழுக்கு மொழுக்கு என்று வலுமிக்கதாகவும் கம்பீரமாகவும் இருந்த குதிரை ஆண்டின் முடிவில் எலும்பும் தோலுமாய் இளைத்து ஒடுங்கிவிட்டது. அதன் கண்கள் புதைந்து போய்விட்டன. வாய் தளர்ந்து தொங்கிற்று, விலா எலும்புகள் துருத்திக் கொண்டிருந்தன, முதுகு குழிவிழுந்து வளைந்து விட்டது, பிடரி முடிகள் சிக்குண்டு உயிரற்றனவாய்த் தொங்கின.

ஒருநாள் இந்தக் குதிரை வெளிமுற்றத்தில் நிற்கக் கண்ட சீமாட்டி, “இந்தக் கிழட்டுச் சனியனை எனக்குப் பார்க்கச் சகிக்கவில்லை, குடலைப் பிடுங்குகிறது! காட்டுக்கு இழுத்துச் சென்று இதைச் சுட்டுக் கொன்று விடலாம்” என்று லாயக்காரனிடம் சொன்னாள்.

ஆனால் அது எப்படிப்பட்ட குதிரை என்பதை லாயக்காரனும் ஊகித்து அறிந்திருக்க வேண்டும். அவன் அதைச் சுட்டுக்கொல்லவில்லை.

ஒரு முக்கிய விழா நாளன்று காலையில் எல்லோரும் ஓய்வெடுத்துக்கொண்டிருக்கையில் கருஞ்சிவப்புப் பொலிக் குதிரை லாயத்திலிருந்து அவிழ்த்துக்கொண்டு வெளியே வந்து விட்டது. பிரபுவின் காய்கறிக் கொல்லைக்குள் புகுந்து அங்கிருந்த முட்டைகோசைத் தின்னத் தொடங்கியது.

அப்பொழுது வெளியே சென்று உலாத்திக்கொண்டிருந்த சீமாட்டி காய்கறித் தோட்டத்திற்குள் வந்தாள். பார்க்கச் சகிக்காத கிழட்டுச் சனியன் அவசர அவசரமாக முட்டைக்கோஸ் மடல்களைப் பிய்த்து விழுங்கிக் கொண்டு நிற்பதைக் கண்டாள்.

சீமாட்டிக்குப் பொல்லாத கோபம் வந்தது.

“அச்சுட்டுப் பிராணியே! உருப்படாச் சனியனே! உனக்கு நல்லாய்ப் பாடம் கற்பிக்கிறேன், பார்” என்று கூச்சலிட்டாள்.

தடியை எடுத்து வந்து குதிரையின் தலையிலே மொத்தினாள்! என்னென்பது இந்த விந்தையை! உடனே அவள் எதிரே கூனி குறுகிக் கொண்டு நடுங்கியவாறு அவளுடைய கணவனான பிரபு நிற்பதைக் கண்டாள்.

மெலிந்து தளர்ந்துபோன பரிதாபக் குரலில் பிரபு முறையிட்டார்.

“மனைவியே, என்னை ஏன் மொத்துகிறாய்? முட்டைகோஸ் மடல்களில் இரண்டைப் பிய்த்துத் தின்றேன்-அதுகூடவா பொறுக்கவில்லை உனக்கு?.. ஓராண்டாய்ப் பட்டினி கிடந்தபின் இந்த மடல்கள் முன்பு நான் அருந்திய அருஞ்சுவை உண்டிகளையெல்லாம்விட இனிமையாய் இருக்கின்றன!”

அவரை அடையாளம் கண்ட சீமாட்டி பதறிப் போய்விட்டாள். பிரபு அடியோடு மாறிப் போய்ப் பார்க்கப் பரிதாபமாய் இருந்தார். குச்சியாய் மெலிந்து முகமெல்லாம் கறுத்துப் போயிருந்தார், தாடியும் நகங்களும் நீளமாய் வளர்ந்திருந்தன, உடம்பெல்லாம் காயமும் வெட்டுமாய் இருந்தன, உடைகள் கந்தலாய்க் கிழிந்து தொங்கின.

இந்த நிலையில் அவர் வேறு யார் கண்ணிலும் படக்கூடாதென்று சீமாட்டி அவர் கையைப் பிடித்து அவசரமாய் வீட்டுக்குள் அழைத்துச் சென்றாள்.

அது முதல் நமது பிரபு அடக்கவொடுக்கமாய் மரியாதையாய் நடந்து கொண்டார்.

# மாரடைப்பு


உலகத்தில் வாழ்ந்து வருகின்ற மனிதர்களில் உயர்ந்தவர், தாழ்ந்தவர், ஏழை, செல்வந்தர், இள வயதினர், வயதானவர், இளைத்தவர், பருத்தவர், ஆண், பெண் என்ற எவ்வித வேறுபாடுகளுமின்றி அவ்வப்போது திடீர் என மாரடைப்பு ஏற்பட்டுப் பலர் மடிந்து வருகிறார்கள். இவ்வித மாரடைப்புகள் ஏற்படாமல் உறுதியாகப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பதை பின்வரும் விளக்கங்களால் தெரிந்து கொள்ளலாம்.

**மாரடைப்பு ஏற்படாமலிருக்க என்ன செய்ய வேண்டும்?**


ஆரம்ப காலம் முதலே அறுசுவை உணவில் கசப்புச் சுவையை நீக்காமல் உணவில் கலந்துண்ண வேண்டும். மனஉளைச்சல், கவலை கொள்ளுதல், அதிகளவான கொழுப்புச் சத்துக் கலந்த உணவு வகைகளை உண்ணுதல், அளவுக்கு மீறிய கடுமையான உடலுழைப்பு ஆகியவைகளை கூடியவரை தவிர்க்க வேண்டும். போதையூட்டும் பானங்கள், புகையிலை, சிகரெட் இவைகளை உபயோகிக்காமல் இருக்க வேண்டும்.

**மாரடைப்பு ஏற்படுவது எப்படி?**

உடல் முழுவதும் பரவி, பாய்ந்தோடும் குருதி இதயத்திலிருந்துதான் புறப்பட்டுச் செல்கின்றது. மனிதர்கள் உண்ணும் அதிக கொழுப்புச் சத்துக்கள் மிகுந்த மாவுப் பொருட்கள் கலந்த உணவினால் இருதய பகுதியிலிருந்து ஆரம்பமாகும் குழாய்களிலிருந்து ஏனைய உடற் பகுதியிலுள்ள எல்லா குருதிக் குழாய்களிலும் கொழுப்புப் பொருட்கள் படிந்து விடுகின்றன. இதை ஆங்கிலத்தில் "பிளட் கொலஸ்ரோல்" (Blood Cholestrol) எனக் கூறுவார்கள். இம்மாதிரியாக கொழுப்புச் சத்துக்கள் குருதிக் குழாய்களில் அடைத்துக் கொள்வதால், உடலில் பாய்ந்தோடும் குருதி சீராக எளிதாக ஓடாமல் பிடிப்போடு நிதானமாக ஓடுகின்றது.



என்றாவது ஒருநாள், இருதய பகுதியிலிருந்து புறப்படும் இரத்தம் முறையாகச் செல்ல முடியாமல் குருதி அழுத்தம் அதிகமாகின்றது. குருதி அழுத்தம் அதிகமாகி இதயத்தில் குருதி பாயமுடியாத காரணத்தினால் இரத்தக் குழாய் வெடித்து விடுகின்றது. இதையே மாரடைப்பு (Heart Failure) என்று கூறுகின்றோம்.



மற்றொரு விதமாகவும் இருதயம் செயற்பட முடியாமல் போய் விடுகின்றது. அது எப்படி என்றால் இருதயப் பகுதியில் சில திறந்து மூடும் வாய் மூடிகள் (Valves) முறைப்படி திறந்து மூடும் செய்கையினை பிடிப்பின் காரணமாக செய்ய முடியாமல் இருந்து விடுகின்றது. இதனாலும் மாரடைப்பு ஏற்பட்டு மரணம் நேரிடுகின்றது.

**மாரடைப்பால் அவ்வப்போது இடையிடையே ஏற்படும் நெஞ்சு வலியை எவ்வாறு நீக்கலாம்?**

மாரடைப்பு ஒருவருக்கு ஏற்படும் முன்னர் சுமார் ஒரு வருடத்திற்கு முன்பிருந்தோ அவ்வப்போதோ விட்டு விட்டு நெஞ்சுவலி இருக்கும். சிலருக்கு இடுப்பு வலி, கை, கால் வலி போன்றவைகளும் இருக்கக்கூடும்.

இம்மாதிரியான வலி உண்டாகும் நேரங்களில் கீழ்க்கண்ட எளிய சிகிச்சையைச் செய்து பலனடையலாம். வலி தோன்றாமலிருக்கும்போதும் தடுப்பு முறையாகவும் இம்முறையைப் பயன்படுத்திக் கொள்ளலாம். நெஞ்சுவலிக்காரர்கள் வெங்காயத்தை உணவில் அதிகமாகச் சேர்த்துண்ண வேண்டும். நெஞ்சுவலி குணமாகும் வரை உடலுறவு வைத்துக் கொள்ளக் கூடாது.

**உபயோக முறை**

வலியுள்ள இருதயம், இடுப்பு, கை, கால் போன்ற பாகங்களில் சுத்தமான விளக்கெண்ணெய் எனப்படுகின்ற ஆமணக்கு (Castor Oil) எண்ணெயைச் சிறிது தொட்டுப் பூசி, தீ மூட்டி, உடல் தாங்கிக் கொள்கின்ற அளவுக்கு இதமாக அனல் காட்டி சுமார் 15 நிமிட நேரம் நன்றாக அழுத்தித் தேய்த்துவிட வேண்டும். இம்மாதிரி தேய்த்துப் பின்னர் ஒரு மணி நேரம் கழித்து, சீயாக்காய்த்தூள் போட்டுத் தேய்த்து வெந்நீரில் குளித்துவிட வேண்டும். இம்மாதிரி தொடர்ந்து மூன்றே தினங்கள் உபயோகிப்பதால் வெகுவாக பலன் கிட்டும். அத்துடன் இத்தினங்களில் காலை உணவுக்கு முன் துளசி இலை 9, உதிரி வேப்பிலை 5 இரண்டையும் நன்றாக மென்று விழுங்கி வரவேண்டும். மற்றபடி உணவில் எவ்விதச் சுவைக் கட்டுப்பாடுமில்லை. ஆனால் இரவு உணவு அரை வயிறுதான் உட்கொள்ள வேண்டும். நீண்ட கால வலியுடையவர்கள் மாதம் இருமுறை கடைப்பிடிக்கலாம்.

**வலி எவ்வாறு உண்டாகின்றது?**

உடம்பில், குருதிக் குழாய்களில் அதாவது நெஞ்சுப் பகுதியில் குருதி சிரமமாக பிடிப்புடன் செல்வதால் நெஞ்சுப் பகுதியில் வலி ஏற்படுகின்றதல்லவா? அதேபோல் மூட்டுக்களின் உராய்வின் போது சரியான பசையின்மையினால் பிடிப்பின் காரணமாக வலி ஏற்படுகின்றது. மேலும் கைகால் பகுதிகளிலும் குருதி சரியாக பாய்ந்து செல்லாதபோதும் பிடிப்பின் காரணமாக வலி உண்டாகின்றதல்லவா?

உஷ்ணத்தினால் பொருட்கள் விரிவடைகின்றன. அதன்படி தீ மூட்டியோ சானாபாத் எனப்படுகின்ற அனல் சிகிச்சை மூலமாகவோ உஷ்ணம் உடலுக்குப்படுகின்ற நேரத்தில் தேய்க்கின்றபோது விளக்கெண்ணெய் பசை விரிவடைந்த மயிர்க்கால் துவாரங்களின் வழியாக குருதியில் கலந்து விடுகின்றது. இதனால் நெஞ்சுப் பகுதியிலுள்ள குருதிக் குழாய்களும் விரிவடைவதோடு, அடைத்த கொழுப்புப் பொருட்களும் இளகி குருதியுடன் படிப்படியாகக் கலந்து குருதிக் குழாய்களும் சுத்தமாகின்றன. இதனால் நெஞ்சுவலி அகன்று விடுகின்றது. மேலும் இந்த எண்ணெய்ப் பசை மூட்டுக்களின் இணைப்புக்களுக்குச் சென்று வழவழப்பு உண்டாகிப் பிடிப்பு அகன்று விடுவதால் மூட்டுக்களில் ஏற்படும் வலியும் நீங்கி விடுமல்லவா? எமது உடலில் எப்போதும் குருதி சீராகப் பாய்ந்தோடிக் கொண்டிருந்தால் எப்போதும் எவ்வித வலியுமின்றி மகிழ்வோடு வாழ முடியுமல்லவா?

நன்றி: **தெய்வீக மூலிகைகள்**

# நிகழ்வுகளின் நிழல்கள்......!

## வலிகாமம் கொத்தணி



கூட்டுறவு அலுவலர் வித்தககலாநிதி மங்கள விளக்கேற்றுகிறார்.




ஞானஏந்தல் விருதுபெற்ற முன்னாள் தலைவர் இ.செல்வரத்தினம் கௌரவிக்கப்படுகிறார்.



ஸ்தாபகத் தலைவர் அமரர்.சு.நடேசு, பொது முகாமையாளர் அமரர் க.சந்திரராசா ஆகியோரின் படங்களுக்கு கூ.ச.தலைவர் மலரஞ்சலி செலுத்துகிறார்.



சங்கானை ப.தெ.வ.அ.கூ.சங்கத்திற்கு பான்ட் வாத்திய கருவிகளை சண்டிலிப்பாய் உதவி பிரதேச செயலர் வழங்குகிறார்.



தெல்லிப்பளை ப.தெ.வ.அ.கூ.சங்கத்திற்கு பான்ட் வாத்திய கருவிகளை யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வழங்குகிறார்.



சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கத்திற்கு பான்ட் வாத்திய கருவிகளை சண்டிலிப்பாய் உதவி பிரதேச செயலர் வழங்குகிறார்.



மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கத்திற்கு பான்ட் வாத்திய கருவிகளை முன்னாள் தலைவர் வழங்குகிறார்.



பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கத்திற்கு பான்ட் வாத்திய கருவிகளை கூ.சபைத் தலைவர் வழங்குகிறார்.



கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கத்திற்கு பான்ட் வாத்திய கருவிகளை கூட்டுறவு அலுவலர் வழங்குகிறார்.



காரைநகர் ப.தெ.வ.அ.கூ.சங்கத்திற்கு பான்ட் வாத்திய கருவிகளை சமாச பொதுமுகாமையாளர் வழங்குகிறார்.



நிகழ்வில் கலந்துகொண்ட முன்பள்ளி ஆசிரியைகள் மற்றும் கூட்டுறவாளர்கள்.

வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.ச.கொத்தணி நடத்திய முன்னாள் தலைவர் அமரர் சு.நடேசு, முன்னாள் பொதுமுகாமையாளர் அமரர் சந்திரராசா ஆகியோரின் நினைவு நிகழ்விலும் அங்கத்துவ சங்கங்களின் முன்பள்ளிகளுக்கான பான்ட் வாத்திய கருவிகள் வழங்கும் நிகழ்விலும் பிடிக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.

## மின்சாரம்

படிக்க நினைத்து
புத்தகம் எடுத்தேன்
மின்வெட்டு ஆதலால்
மின்சாரம் நின்றது!

அரைமணி சென்றதும்
மின்வரும் என்று நான்
படித்ததை பாதியில்
விட்டெழுந்திட்டேன்
அன்னையும் தந்தையும்
அவருடன் அயல்வீடும்
சேர்ந்தே புதினம்
கதைக்கவும் தொடங்கினர்

நாள்முழுதெல்லாம் நடந்தேறிய ஊர்வம்பு
நாற்பது நிமிடத்தில் கதைத்தே முடித்தனர்
"வியன் பிடிச்ச கரண்டைக் காலை
வைர நெஞ்சம்" தொடங்கவும் போகுது
ரி.வி.சீரியல் பார்த்த எம்மவர்
புலம்பலும் குமுறலும்
மின்வழங்குவோருக்கு
புரியுமா இங்கே?

மாணவர் நாங்கள்
கல்வியைக் கற்றிட
படித்திடும் வேளையில்
மின்சாரம் கிடைக்குமா?

-ச.கிரோசிகா
தரம்-9
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.

## கல்விப் பயன்

கல்விக்கூடம் சென்றிடுவோம்
கலைகள் யாவும் கற்றிடுவோம்
பல் வித்தைகளும் பயின்றிடவே
படிப்பு தானே முதல் ஆகும்

கல்லாதவரை மரம் என்றும்
கண்கள் இரண்டும் புண் என்றும்
ஔவை, வள்ளுவர் சொன்னதுமேன்
எண்ணிப் பார்க்க வேண்டாமா
கல்லும் ஒருநாள் தேய்ந்திடலாம்

கடலும் வற்றிப் போய்விடலாம்
கல்வி என்றும் மறைவதில்லை
கற்றவர்க்கு என்றும் குறையுமில்லை
கல்வி ஒன்றே மனிதருக்கு
கடவுள்தந்த பெருஞ்செல்வம்
சொல்லிச் சென்றவர் பெரியவர்கள்

சும்மா அவர்கள் சொல்வதில்லை
சின்னப்பிள்ளையர் நாம் எல்லாம்
கண்ணைப் போன்ற கல்வி தனை
எண்ணிப் படித்து உயர்ந்திடுவோம்
உத்தமர் வாழ்வு வாழ்ந்திடுவோம்!

-கவிக்குயில்-

## வேண்டும்!

அ,ஆ,இ,ஈ,உ,ஊ,எ,ஏ,ஐ,ஒ,ஓ,ஔ
அன்பெனும் அலை எங்கும் அசைந்தாட வேண்டும்!
ஆசையெனும் தியணைந்து அமைதிவர வேண்டும்!
இருளென்னும் மாயை மனம் இருந்தகல வேண்டும்!
ஈகையென்னும் பண்புள்ளத்தில் நிறைந்திடுதல் வேண்டும்!
உண்மையென்ற விருட்சம் மிக உயர்ந்திடுதல் வேண்டும்!

-வேலணையூர் சசிவர்மன்-

ஊட்டி வளர்த்திட்ட குலம் ஓங்கிடுதல் வேண்டும்!
எட்டி உதைப்போரையும் சேர்த்தணைத்திடல் வேண்டும்!
ஏன் என்று கேட்டறிவைப் பெருக்கிடுதல் வேண்டும்!
ஐக்கியமாய் ஆண்ட இனம் ஒன்றுபட வேண்டும்!
ஒற்றுமையை நாம் என்றும் பின்பற்றுதல் வேண்டும்!
ஓரிடத்தை மட்டும் அறிந்திருத்தல் ஒழிந்திடுதல் வேண்டும்!
ஔவையவள் சொன்ன அறவழி நடக்க வேண்டும்!

## கூட்டுறவு தந்த வாழ்வு

ஏற்றமிகு வாழ்வுதனை
எமக்கெனவே தந்திங்கு
நாற்திசையும் வாழ்த்துகின்ற
நல வாழ்வு எமக்களித்து
வாழ்வாங்கு வாழ்வதற்கு
வழி சமைத்துக் களம் அமைத்த
கூட்டுறவு வாழ்க வளமுடன்!

மானிட வாழ்வில் மகத்துவம் பேசி
மாண்புற வாழ வழிபல சொல்லி
கூர்ப்பது கொண்டு குவலயம் தன்னில்
அன்பாய் எம்மை அரவணைத்து வந்த
கூட்டுறவு வாழ்க வளமுடன்!

நாளும் பொழுதும் நல்லது பேசி
நயமாய் வாழும் குணமது பெற்று
மனதினை மதித்து மற்றவர் போற்ற
குணமது உயர்த்தி நற்பண்புதனை
எமக்கு ஊட்டுவித்த
கூட்டுறவு வாழ்க வளமுடன்!

கூட்டுக்குள்ளே இருந்த பெண்கள்
கூட்டுறவின் ஏணியாகி
நல்ல பல வழிகள் சமைக்க
நன்றே வந்தது கூட்டுறவு
வாழ்க வளமுடன் கூட்டுறவு!

செல்வி செ.சிவலோஜினி,
முன்பள்ளி ஆசிரியை,
கோண்டாவில் ப.நோ.கூ.ச.

## கற்பக மலரே!

ஞானச்சுடரே!
நயமிகு ஒளியே!
சிந்தை முழுதும்
உந்தன் நினைவே!
விழியது உயர்த்தி
தமிழது பேசும்
பண்புகள் நிறைந்த
பாசத்து உயிரே!
கரங்களில் தவழ்ந்து
கனிமொழி பேசி
கலக்கிடும் மனத்தை
கச்சிதமாய் கனிய வைக்கும்
கற்பக மலரே!
இதழ்பல கொண்டு—ஒரு
அகவையை முடித்து
நிலைத்திடும் மலரே!
புதுவழி கண்டு
அதன்வழி சென்று
வித்தையாய் பலவகை
தேடல்கள் சேர்த்து
அறவழி செல்லும்
தர்மத்தைப்போல
அவனியில் வலம்வர
கூட்டுறவாளனாய்
வாழ்த்துகின்றேனிங்கு!

வல்லைவாசன்,
அச்சுவேலி.

## உயிர்ப்பித்தால்

உயிர் என நினைத்து உளமதில் சுமந்தேன்
உயர்வாய் உனை மதித்தேன்—நீயோ
உதறியே எறிந்தாய் என் உயிர் பிரித்தாய்
உளமதில் ஊமையாய் நான் அழுதேன்
உளத்தில் ஆழிப்பேரலையுடன் போராடினேன்

அலைகரம் ஓய்ந்தன அமைதியும் பிறந்தது
உறுதியுடன் நான் நிமிர்ந்தேன்—ஆனால் என்
உளமதில் உறங்கியே கிடந்த கவி உணர்வுகள்
உயிர்த்தெழுந்தன உன் செயலால்

ஊற்றுப்பேனா முனையினைத் திறந்து —என்
உணர்வுக்கு உயிர் கொடுத்தேன்—கவி
உலகினில் நான் நுழைந்தேன்—எழுத்து
உலகினில் நான் உயிர்வாழும் காலம்வரை
பெறும் உயர்வுகள் யாவும் உன் அன்புக்கு அர்ப்பணமே
ஏனெனில் என் கவிதைத் துளிகளில் கலந்தே உயிர்ப்பித்த
தெய்வம் நீ ஆனதினால்.

கி.தவம்,
மானிப்பாய் ப.நோ.வ.அ.கூ.சங்கம்



சமாசத்தால் வெளியிடப் பட்ட சமூக அறிவியல் இயற்கை விஞ்ஞானமும் கூட்டுறவு அபிவிருத்தியும் என்னும் நூலின் சிறப்புப் பிரதியை கூ.அ.உ. ஆணையாளர் சிவலிங்கத்திடமிருந்து அமரர் சு.நடேசுவின் மகள் பெற்றுக்கொள்வதை படத்தில் காணலாம்



அரியாலை ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் நவீன கிளை நிலையத்தை யாழ்.மாவட்ட மதுவரித் திணைக்கள அதிகாரி திரு.சோதிநாதன் அவர்கள் திறந்து வைப்பதையும். அருகில் சமாச, சங்கப் பணியாளர்கள் நிற்பதையும் காணலாம்




அச்சுவேலி வட்ட லயன்ஸ் கழகத்தினரால் கதிரொளி ச.ச.நிலையத்தில் அண்மையில் நடத்தப்பட்ட இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வில் மாணவன் கு.ராஜ்குமார், நிலைய தலைவர் ஸ்ரீகாந் ஆகியோருடன் வட்ட லயன்ஸ் கழகத்தலைவர் லயன்ஸ் எஸ்.யோகசிங்கம் பொதுமகன் ஒருவருக்கு கண்ணாடி அணிவிப்பதையும், அருகில் லயன்ஸ் என்.கிருஸ்ணர், லய ன்ஸ் எஸ்.ஸ்ரீஸ்காந்தராசா ஆகியோர் நிற்பதை முதலாவது படத்திலும், பயனாளிகளை 2வது படத்திலும் காணலாம்.

## சமாசம் கூட்டுறவு.......

1ம் பக்க தொடர்ச்சி

முகாமையாளர் எஸ்.சிவகுமார் பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், யாழ்.மா.சி.க.வ.கூ.ச.சமாச தலைவர் எஸ்.சிவசுப்பிரமணியம், யாழ்.மா.க.தொ.கூ.ச.சம்மேளனத் தலைவர் எஸ்.தவரட்ணம், யா.மா.கிராமிய வங்கிகளின் சமாசத் தலைவர் எஸ்.தனபாலசிங்கம், வலி.கொத்தணித் தலைவர் க.மெய்யழகன், வடமராட்சி கொத்தணித் தலைவர் சி.சிவமார்., அமரர் சு.நடேசு குடும்பத்தினரும் கலந்து கொண்டனர்.



கோண்டாவில் ப.தெ.வ.அ. கூ.சங்கத்தின் மேற்பார்வையில் நடத்தப்படுகின்ற சிறி அம்பாள் முன்பள்ளியின் சிறுவர்தின நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட சங்க கல்வி அலுவலர் சு.சிவலிங்கம், முன்பள்ளி ஆசிரியைகள் செல்வி. செ.சிவலோஜினி, செல்வி.ந.ஜெனா, ச.ச.நிலைய தலைவர், நிர்வாக உறுப்பினர் மற்றும் பெற்றோர் ஆகியோரைப் படத்தில் காணலாம்.


எமது மண்ணின் தனித்துவமான வளமான பனை வளத்தை பாதுகாத்து, வளப்படுத்தி எமது பொருளாதாரத்தை மேம்படுத்துவோம்!

பனை வளத்தினை கொண்டு எமது சங்கத்தால் பல்வேறு உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன. சுத்தமாகவும், சுவையாகவும், சுகாதார முறைப்படியும் எம்மால் தயார்படுத்தப்பட்ட பனைசார் உற்பத்திகள் தற்போது விற்பனையில்!

அந்த வகையில் எமது பனைசார் உற்பத்திகளான,

- போத்தலில் அடைக்கப்பட்ட பனாங்கள்ளு.
- பனை வெல்லம்.
- பனாட்டு.
- ஒடியல்.

என்பவற்றை நியாயமான விலைகளில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

காரைநகர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

காரைநகர்


இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு இல.52, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2008ம் ஆண்டு நவெம்பர் மாதம் வெளியிடப்பட்டது.